வழிகாட்டி 1

# உங்கள் தொழில்நுட்பத்தைப் பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் வைத்திருத்தல்



டிஜிட்டல் சாதனங்கள் அனைத்தும் பாதுகாப்பு அம்சங்களுடன்தான் வருகின்றன. இந்த அம்சங்கள் உங்கள் தனிப்பட்ட தகவலைப் பாதுகாப்பதோடு, உங்கள் அனுமதி இல்லாமல் உங்கள் சாதனத்தை யாரும் பயன்படுத்துவதில்லை என்பதையும் உறுதிப்படுத்தும்.

இந்த வழிகாட்டி உங்கள் தொலைபேசிகள், டேப்ளட்கள் அல்லது கணினியில் பாதுகாப்பு அம்சங்களைப் பயன்படுத்துவது பற்றிய உதவிக்குறிப்புகளை வழங்குகிறது.

நினைவில் கொள்ளுங்கள்! உங்களுடைய சூழ்நிலையைப் பற்றி உங்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். உங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் என நீங்கள் உணரும் பாதுகாப்பு மற்றும் பத்திர நடவடிக்கைகளை மட்டுமே எடுத்துக் கொள்ளுங்கள்.

### கடவுச்சொற்கள் மற்றும் கடவுக்குறியீடுகள்

ஊகிக்கக் கடினமாக இருக்கும் வலுவான கடவுச்சொற்களையும் கடவுக்குறியீடுகளையும் உருவாக்கவும். உங்களுக்கு மட்டுமே தெரிந்த ஒரு சொற்றொடரைப் பயன்படுத்துவது, வலுவான கடவுச்சொற்களை உருவாக்குவதற்கான ஒரு சிறந்த வழியாகும், எடுத்துக்காட்டாக, 'C@tsareb3tterthand0gs!' என்பதைப் பயன்படுத்தலாம். 6 முதல் 8 வரையான எழுத்துகள் (பேரெழுத்து உட்பட), எண்கள் மற்றும் குறியீடுகளைக் கொண்ட ஒரு கலவையைத் தேர்வு செய்யவும். உங்களை அறிந்தவர்களால் எளிதில் ஊகிக்கக் கூடிய உங்கள் குடும்பப் பெயர்கள், பிறந்ததேதிகள், செல்லப்பிராணிகளின் பெயர்கள், தனிப்பட்ட பொழுதுபோக்குகள் அல்லது பிடித்த விஷயங்கள் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டாம்.

உங்கள் அனைத்துச் சாதனங்களுக்கும் கணக்குகளுக்கும் ஒரே கடவுச்சொல்லைப் பயன்படுத்த வேண்டாம். யாராவது இந்த ஒரு கடவுச்சொல்லைக் கண்டறிந்துவிட்டால், அவர்கள் அனைத்திற்குமான அணுகலைப் பெற்றுவிடுவார்கள்.

உங்கள் கடவுச்சொற்களையும் கடவுக்குறியீடுகளையும் ஒருபோதும் பகிர்ந்து கொள்ள வேண்டாம், மேலும் அவற்றை அடிக்கடி மாற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

### வைரஸ்கள், தீம்பொருள் மற்றும் பிற பிழைகள்

வைரஸ்கள், தீம்பொருள், வேவுபொருள் ஆகியவை உங்களது தகவலைத் திருட அல்லது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதைக் கண்காணிக்க, தானாகவே தம்மை உங்கள் சாதனத்தில் நிறுவும் நிரல்கள் ஆகும்.

வைரஸ்கள், தீம்பொருள், வேவுபொருள் ஆகியவற்றை ஸ்கேன் செய்து கண்டுபிடித்து, அவற்றை உங்கள் சாதனத்திலிருந்து அகற்றும் வைரஸ் தடுப்பு மென்பொருளை நீங்கள் நிறுவிக் கொள்ளலாம்.

உங்கள் எல்லாப் பயன்பாடுகளையும் நிரல்களையும் இன்றைய தேதி வரை புதுப்பித்து வைப்பதன் மூலம், வைரஸ்களின் தாக்கத்தைத் தவிர்க்க உதவவும். நீங்கள் அறிவிப்பைப் பெற்றவுடன் விரைவில் 'புதுப்பி' என்பதைக் கிளிக் செய்வது நல்லதொரு பழக்கமாகும்.

ஒரு நண்பரால் அல்லது ஒரு வங்கி போன்ற நன்கு அறியப்பட்ட நிறுவனத்தால் உங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதைப் போலவே இருந்தால் கூட, மின்னஞ்சல்களில் வரும் சந்தேகத்திற்கிடமான இணைப்புகள் அல்லது உடனிணைப்புகளைக் கிளிக் செய்ய வேண்டாம். இணைப்புகளைக் கிளிக் செய்வதன் மூலம்தான் உங்கள் கணினியை வைரஸ்களும் தீம்பொருளும் தொற்றிக் கொள்ளும்.

### Bluetooth மற்றும் Wi-Fi

Bluetooth மற்றும் Wi-Fi ஆகியவற்றை நீங்கள் பயன்படுத்தாதபோது அவற்றை நிறுத்தி விடவும். இந்த இணைப்புநிலைக் கருவிகள் உங்களுக்குத் தெரியாமலே மற்றவர்கள் உங்கள் சாதனத்தை அணுகுவதை அனுமதிக்கலாம்.

### இருப்பிடச் சேவைகள்

GPS மற்றும் இருப்பிடச் சேவைகள் ஆகியவற்றை நீங்கள் பயன்படுத்தாதபோது அவற்றை நிறுத்தி விடவும். நீங்கள் Google Maps போன்ற பயன்பாடுகளைப் பயன்படுத்தும் போது, இருப்பிடச் சேவைகளைப் பயன்படுத்துவது வசதியாக இருந்தாலும், உங்களை மோசடி செய்பவருக்கும் கூட நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதை இருப்பிடச் சேவைகள் காட்டிக் கொடுத்துவிடலாம்.

**பயன்பாடுகள்**
நீங்கள் இனிமேல் பயன்படுத்தாத அல்லது நீங்கள் நிறுவியதாக உங்களுக்கு நினைவில்லாத பயன்பாடுகளை உங்கள் தொலைபேசியில் இருந்து அகற்றவும் அல்லது நீக்கவும்.
பல பயன்பாடுகளில் நீங்கள் பதிவு செய்யும் போது அவை ஏராளமான தனிப்பட்ட தகவலைக் கேட்கின்றன. நீங்கள் பகிரும் தகவலைப் பற்றி கவனமாகச் சிந்தித்துப் பாருங்கள். உங்களது தனியுரிமையைப் பாதுகாக்க, பயன்பாட்டைப் பயன்படுத்தத் தேவையான குறைந்தபட்ச தனிப்பட்ட தகவலை மட்டுமே வழங்கவும்.

**மின்னஞ்சல்**
உங்கள் பெயர் அல்லது உங்களை அடையாளப்படுத்தும் வேறு எந்த வார்த்தையையும் பயன்படுத்தாத புதியதொரு மின்னஞ்சல் கணக்கை உருவாக்கவும். பாதுகாப்புத் திட்டமிடல் உட்பட, நீங்கள் தனிப்பட்ட முறையில் வைத்திருக்க விரும்பும் விஷயங்களுக்கு இந்த மின்னஞ்சல் கணக்கைப் பயன்படுத்தவும்.

**ஒவ்வொரு முறையும்... உள்நுழைக/வெளியேறுக**
உங்கள் மின்னஞ்சல் கணக்குகள், கணினிகள் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றை நீங்கள் பயன்படுத்தி முடிக்கும் ஒவ்வொரு முறையும் அவற்றிலிருந்து வெளியேறவும். அந்த வழியில், வேறு யாரும் உங்கள் கணக்குகள் அல்லது தனிப்பட்ட தகவல்களை எளிதாக அணுக முடியாது.

**உங்கள் சாதனங்களின் மீது ஒரு கண் வைத்திருங்கள்**
தொலைபேசிகள் மற்றும் டேப்ளட்டுகளை ஒருபோதும் கவனிக்காமல் விட்டுவிட வேண்டாம், எப்போதும் அவற்றைப் பூட்டி வைப்பதற்காக கடவுக்குறியீட்டைப் பயன்படுத்தவும்.

**உங்கள் தொலைபேசி, டேப்ளட் அல்லது கணினியில் உள்ள பாதுகாப்பு அம்சங்களைப் பயன்படுத்தவும்**
உங்கள் சாதனத்தில் உள்ள பாதுகாப்பு அம்சங்களை இயக்கி விடவும். ஒவ்வொரு இயக்க முறைமை மற்றும் பயன்பாட்டுப் புதுப்பித்தலுக்கும் பிறகு நீங்கள் அவற்றை மீண்டும் சரிபார்ப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

**உதவி பெறுக**
நினைவில் கொள்ளுங்கள்! தொழில்நுட்பம் மூலம் முறைகேடு செய்தல் சரி இல்லை, அது உங்கள் தவறு இல்லை. உதவி கிடைக்கும்.
பாதுகாப்பற்ற நிலை இருப்பதாக நீங்கள் உணர்ந்தால், உடனடியாக பூஜ்ஜியம் பூஜ்ஜியம் பூஜ்ஜியம் (000) என டயல் செய்து, காவல்துறை மற்றும் அவசரநிலைச் சேவைகளைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**உங்களால் ஆங்கிலத்தில் பேச முடியாது என்றால்**
லேண்ட்லைன் தொலைபேசியிலிருந்து பூஜ்ஜியம் **பூஜ்ஜியம் பூஜ்ஜியம் (000)** என்ற எண்ணை அழைத்து, **'Police' ('காவல்துறை'), 'Fire'** **('தீயணைப்பு')** அல்லது **'Ambulance' ('ஆம்புலன்ஸ்')** எனக் கூறவும். இணைப்பிலேயே இருங்கள், நீங்கள் ஒரு மொழிபெயர்ப்பாளருடன் இணைக்கப்படுவீர்கள்.

இது ஓர் அவசரநிலை இல்லை என்றால், உங்கள் உள்ளூர் காவல் நிலையத்தை அழைக்கவும் அல்லது அங்கு செல்லவும்.

மேலும் உதவிக்காக, முடிந்த வரை விரைவில் பாதுகாப்பான தொலைபேசி அல்லது சாதனத்திலிருந்து **1800RESPECT**-ஐத் தொடர்பு கொள்ளவும்.
**1800 737 732**
1800respect.org.au

**1800RESPECT** ஆனது குடும்ப முறைகேடு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் உட்பட அனைத்து வகையான முறைகேடுகளுக்கும் 24-மணிநேர, இலவச மற்றும் இரகசிய பாதுகாப்புத் திட்டமிடல், ஆலோசனை மற்றும் ஆதரவு ஆகியவற்றை வழங்குகிறது. அவர்கள் உங்களை உங்கள் பகுதியில் உள்ள பிற சேவைகளுடனும் தொடர்புபடுத்த முடியும். பிற மொழிகளில் மேலும் தகவல், ஆலோசனை மற்றும் வீடியோக்களைப் பார்க்க, 1800respect.org.au/languages-க்குச் செல்லவும்.